Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 07 வெள்ளிக்கிழமை (23-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 262

# பேச்சுக்கான முன் முயற்சியில் அரசு ஈடுபடாது!

## அமைச்சர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஆக. 23

விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுக்களை நடத்துவதற்கான முன் முயற்சிகளில் அரசு ஈடுபடுவதற்கான வாய்ப்பு ஏதும் இல்லை.

அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்க, நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் வைத்து இதனை அறிவித்தார்.

ஆனையிறவுச் சண்டையில் அரசுப் படையினர் வெற்றி பெற்றுள்ள இந்நிலையில், பேச்சு முயற்சியில் தானாக ஈடுபடும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றார் அவர்.

புதிதாக பேச்சுவார்த்தை தொடங்குவதாயின் அதற்கான யோசனை ஏதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்திடமிருந்து தான் வரவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை —

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைத் துறந்து விட்டு எல்லா அரசியல் கட்சிகளுடனும் முன் நிபந்தனை எதுவும் விதிக்காமல் பேசுவதற்குத் தயாராக இருந்தாலே ஒழிய, எந்தவிதமான பேச்சுவார்த்தைக்கும் இடமில்லை என்பது ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டு விட்டது.

பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகளை இலங்கை அரசு ஏற்கனவே தளர்த்தியுள்ளது. மேலும் அவற்றைத் தளர்த்துவது என்ற பேச்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பூநகரியில் இன்று பேரணி

தமிழ் மக்கள் மீதான ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடையை கண்டிக்கும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை பூநகரியில் ஆர்ப்பாட்டப்பேரணி நடைபெற இருக்கிறது. பேரணியில் கலந்து கொள்ளுமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

காலை 7.00 மணிக்கு பரமன்கிராயிலிருந்து பேரணி ஆரம்பமாகும். மாலை பூநகரி வாடியடிசந்தை மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

இதே போன்ற பேரணிகள் யாழ். வன்னி மாவட்டங்களில் நடத்தப்பட்டது தெரிந்ததே. (இ-135)

## சோவியத்துக்கு உலக நாடுகளின் உதவி கிடைக்கும்

மாஸ்கோ, ஆக. 23

சோவியத்துக்கு வழங்கவிருந்த உதவிகளை இடைநிறுத்தும் வகையில் ஜப்பானும், பிரிட்டனும் விடுத்திருந்த உத்தரவுகளை அந்நாடுகள் வாபஸ் பெற்றுவிட்டன.

சோவியத்துக்கான பொருளாதார உதவி நிறுத்தத்தை ஐரோப்பிய நாடுகள் சமூகமும் வாபஸ் பெற்றுள்ளது.

சதிப் புரட்சியை எதிர்த்து சோவியத்துக்கான உதவிகளை பல உலக நாடுகள் நிறுத்தியிருந்தன. புரட்சி முறியடிக்கப்பட்டதை அடுத்து அவை மீண்டும் உதவி வழங்க முன் வந்துள்ளன. (உ)

## அம்பாறை கண்ணியில் 12 சிப்பாய்கள் மரணம்!

கடந்த செவ்வாய் பகல் 11 மணியளவில் அம்பாறை மாவட்டம் பாலையடி வெட்டை இராணுவ முகாமை நோக்கி டிராக்டரில் சென்றுகொண்டிருந்த ஸ்ரீலங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணி வெடித் தாக்குதலில் 12 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். டிராக்டரும் சேதமுற்றது.

பாலையடி வெட்டை இராணுவ முகாமுக்கும் மட்டக்களப்பு மாவட்டம் 36 ஆம் கிராமத்தில் உள்ள இராணுவ முகாமுக்கும் இடையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. (உ-5)

## சதிக்குழு கூண்டோடு கைது! ஒருவர் மட்டும் தற்கொலை!!

மாஸ்கோ, ஆக. 23

சோவியத் அதிபர் கோர்பச்சேவுக்கு எதிராக சதிப்புரட்சி செய்த எண்மர் குழுவில் ஏழுபேர் ரஷ்யக் குடியரசுக் காவலர்களினால் கைது செய்யப்பட்டனர்.

மற்றையவரான சோவியத் உள்துறை அமைச்சர் பொரிஸ் பியூகோ, பொலீஸார் தம்மைக் கைது செய்யப் போகிறார்கள் என்பதை அறிந்ததும், தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

சதிக்குழுவில் இடம்பெற்ற சோவியத்தின் துணை ஜனாதிபதி கினாடி யனயேவ், பிரதமர் வலன்டின் பாவ்லோ,

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தென்னிந்திய திருச்சபையின் தேவாலய இல்லத்தில் பொலிஸ் திடீர் சோதனை

கொழும்பு வெள்ளவத்தை பசல்ஸ் லேனில் உள்ள தென் இந்திய திருச்சபையின் ''தேவாலய இல்லம்'' கடந்த வாரம் பொலீஸாரினால் திடீர் சோதனைக்குள்ளானது.

அங்கிருந்து ஒட்சிசன் சிலிண்டர்கள், பெற்றோல், டீசல், கம்பியூட்டர் கருவிகள் ஆகியவற்றைப் பொலீஸார் எடுத்துச்சென்றனர்.

அந்த இல்லத்துக்குப் பொறுப்பான ஒருவரும் பொலீஸாரினால் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

கூட்டுப்படை தலைமையகத்திடம் அனுமதி பெற்று வடக்கே எடுத்துச் செல்வதற்காக இப்பொருள்கள் அங்கு வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## கடந்த மாதம் 176 படையினர் பலியாம்!

கொழும்பு, ஆக. 23

கடந்த ஒரு மாத காலத்தில் வடக்கு - கிழக்கில் 176 படையினரும், 3 பொலீஸாரும் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவரும் விடுதலைப் புலிகளுடனான சண்டையில் கொல்லப்பட்டனர்.

அமைச்சர் வின்சென்ட் பெரேரா நாடாளுமன்றத்தில் நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

தென்பகுதியில் ஜே.வி.பி. யினரின் நடவடிக்கைகள் கணிசமான அளவு குறைந்திருப்பதாகவும் அமைச்சர் சொன்னார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்க வகை செய்யும் பிரேரணை மீதான விவாதத்தில் அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார். [இ-எ]

## கோர்பியை சதிகாரர்கள் 'பிளாக் மெயில்' செய்தனர்!

### அனுபவம் குறித்து அவரே பேட்டி

மாஸ்கோ, ஆக. 23

கிரிமியா நகரில் என்னைத் தடுத்து வைத்த சதிகாரர்கள், ஜனாதிபதி பொறுப்புகளை துணை ஜனாதிபதியிடம் ஒப்படைத்ததாக அறிவிக்கும் பத்திரத்தில் கையெழுத்திடுமாறு என்னை ''பிளாக்—மெயில்'' செய்தார்கள். ஆனால் நான் மறுத்துவிட்டேன்.

—இவ்வாறு கூறினார் சோவியத் ஜனாதிபதி மிக்மெயில் கோர்பச்சேவ்.

தமக்கு ஏற்பட்ட நெருக்கடியை நேற்றிரவு இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் விவரித்தார்:

கடந்த ஞாயிறு மாலையில் ஓய்வுக்காக கிரிமியா நகரில் நான் தங்கியிருந்த போது குடியரசு ஒப்பந்தங்கள் பற்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஈழ அகதிகள் திரும்பக்கூடிய சூழ்நிலையை உருவாக்குக!

### ஸ்ரீலங்காவிடம் இந்தியா வற்புறுத்து

புதுடில்லி, ஆக. 23

இந்தியாவில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் அவர்களுடைய தாயகத்திற்கு கூடிய விரைவில் திரும்புவதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா அரசை இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி லோகசபையில் நேற்று எழுத்து மூலம் அளித்த பதில் ஒன்றில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் சண்டை தொடர்ந்து இடம்பெற்று வருவது இந்தியாவுக்கு கவலையை அளித்து வருகிறது. இச் சண்டையால் இந்தியா வந்துள்ள ஈழத் தமிழ் அகதிகளால் இந்தியாவின் பாதுகாப்பு சூழ்நிலை

[3 ஆம் பக்கம் பாாக்க]

## 500 ஈழப்போராளிகளும் நாடு கடத்தப்படுவரா?

### தமிழக சிறைகளில் இடநெருக்கடி

சென்னை, ஆக. 23

தமிழ்நாட்டில் காவலில் வைக்கப்பட்டுள்ள ஈழப் போராளிகள் சுமார் ஐநூறு பேர் நாடு கடத்தப்படுவார்களா அல்லது தொடர்ந்து சிறையில் வைக்கப்படுவார்களா என்பது கேள்விக்குரியதாக இருக்கிறதாம்.

இவர்கள் பற்றி மத்திய மற்றும் மாநில அரசுகள் எந்த முடிவும் எடுக்கவில்லை.

எனினும், வேலூர் மற்றும் சிறைகளில் காவலில் வைக்கப்பட்டுள்ள பெரும் எண்ணிக்கையான போராளிகளால் பிரச்சினைகள் எழக்கூடும் என்று அதிகாரிகள் கருதுகின்றனர்.

பாதுகாப்புக் கருதியாவது இவர்களை நாடுகடத்தவேண்டும் என்றும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மட்டுமின்றி.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் அதிகாரிகளுடன் கனேடிய பிரதிநிதி பேச்சு!

### இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவர் வசம் 4 அம்ச திட்டம்

கொழும்பு, ஆக. 23

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காண்பதற்கு ஸ்ரீலங்கா அ[illegible] தூண்டுவதன் [illegible] கனேடிய அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவர் கொழும்பு வந்துள்ளார்.

லண்டன், பாரிஸ் ஆகிய இடங்களில் உள்ள விடுதலை புலிகள் [illegible] கனேடிய அரச பிரதிநிதி கடந்த வார இறுதியில் கொழும்பு வந்தார். அவரது பெயர் திரு. அலென் அல்பிறெட்.

திரு. அல்பிறெட் கொழும்பில் அரசாங்க உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ். இந்து, 25 வயது நிரம்பிய நோர்வேயில் டாக்டராக பணிபுரியும் மணமகனுக்கு குற்றமற்ற, படித்த, அழகான மணமகள் தேவை. நட்சத்திரம்: திருவாதிரை. ABCDE, 328, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (17856)

யாழ். இந்து, 26 வயது கனடாவில் தொழில் புரியும் 8 இல் செவ்வாய் குற்றமுள்ள சதய நட்சத்திர மணமகனுக்கு ஓரளவு படித்த, அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு: இல. 345, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (17874)

### தவறிவிட்டது

இலட்சுமணன் எழிற்செல்வன் ஆகிய எனது அடையாள அட்டை [722440269V] கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 31, நக்கா வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (17870)

யாழ். நகருக்கும், திருநெல்வேலிச் சந்தைக்குமிடையில் மணிக்கூட்டுச் செயின் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது L. றஜீ, 53, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4258)

மாணிக்கம் பத்மநாதன் ஆகிய எனது அடையாள அட்டை 511100437V மற்றும் சவுந்தரநாயகியின் அடையாள அட்டை கொழும்பிலிருந்து வந்த பாஸ் ஆகியவை அடங்கிய பேர்ஸ் மருதனார் மடத்துக்கும், மானிப்பாய்க்கும் இடையில் 21 - 8 - 91 காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் பணிமனையில் அல்லது பாஸில் உள்ள மல்லாகம் விலாசத்தில் கையளிக்கவும். (17664)

### சோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை போன்ற துரதிர்ஷ்டங்கள் நீங்கி, அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும். அதிர்ஷ்டம் இல்லையேல் பணம் திருப்பப் பெற உத்தரவாதம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, [அரசடிச் சந்தி] நல்லூர். (17867)


PERSONAL
NEW SCIENCE CENTRE
Elilakam Front Lane, Jaffna.

★ ஆரம்பமாகும் புதிய பகுதிகள் ★

CHE.
சேதன இரசாயனம்
PHY.
மின்னியல்
ZOO.
சுவாசத்தொகுதி
BOT.
தாவர உடலமைப்பு
APP.
உராய்வு.
PURE
ஈருறுப்பு விரிவு

நிறுவனத்தில் நேர அட்டவணையைப் பெற்றுக் கொள்ளலாம். (சி/0401)


### தேவை

பெண்கள், சிறுவர்களுக்குரிய ஆடைகள் வெட்டித் தைக்கக் கூடியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். வினோபா றேட் சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [எழிலகத்தின் முன்பாக] (17658)

### ரைப்ரைட்டர்

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி-0290)

### அறிவித்தல்

திருமதி தனலெட்சுமி நடராசா ஆகிய நான் செல்வி பிரிந்தா என அழைக்கப்பட்டு வந்த எனது மகளின் பெயரை இன்று முதல் செல்வி பிருந்தா என மாற்றியுள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றேன். 73, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். (17869)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4818)

## சபிண்டீகரண அழைப்பு



தோற்றம்: 21 — 5 — 1900

மறைவு: 24 — 7 — 1991

அமரர்

## கு. வேலுப்பிள்ளை

[புளியங்கூடல் பிரபல ஒலி, ஒளி அமைப்பாளர்]

ஐயா,

உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்களோடு உற்றார், உறவினரும், ஊர்மக்களும் பிரார்த்திக்கிறார்கள்.

இன்று (23-8-91) வெள்ளிக்கிழமை பகல் 12-00மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளில் பங்குபற்றுமாறு உறவினர், நண்பர்கள், அயலவர் யாவரையும் பணிவுடன் வேண்டுகிறோம்.

வே. திருநாவுக்கரசு
குடும்பத்தினர்

இல. 155,
திருநெல்வேலி கொலணி,
யாழ்ப்பாணம். [4254]

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 23 — 03 — 1973

இறப்பு: 23 — 08 — 1990

2ஆம் லெப்டினன்ட்

## சின்ன அல்பேட்

(சடாட்சரம் தனேஸ்வரன்)

திதி: 10 — 09 — 1991

எங்கள் அன்புத் தனேஸ்வரா!
அன்னியனை அழித்து அடிமை விலங்கு உடைத்து
மண்ணினை மீட்டு தமிழினம் காத்திட
அரும்பிலே குருதியால் அணைந்துவிட்ட வீரனே!
ஆண்டுகள் சென்றாலும் ஆறாது உம் நினைவு
மீண்டும் வா தமிழ் மண்ணில்
சுதந்திரமாய் தவழ்வதற்கு.

தாய், தந்தை,
சகோதரர்கள், சகோதரிகள்,
(நீர்வேலி மாசிவன்)

''வீ ஊஸ் தங்க மாளிகை''
கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம். [17863]

## அறிவித்தல்

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

எமது பிரதேச சபையின் நடுக்கட்டல் உத்தியோகத்தருக்கு எம்மால் வழங்கப்பட்ட 13901 தொடக்கம் 14000 வரையிலான இலக்கங்களையுடைய பற்றுச்சீட்டுக்களைக் கொண்ட 140 ஆம் இலக்கப் பற்றுச்சீட்டுப் புத்தகம் தவறிவிட்டது. எனவே, மேற்படி பற்றுச்சீட்டுக்களின் மூலம் ஆதனவரி செலுத்துவது செல்லுபடியற்றதென்பதற்கான அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது. இப்பற்றுச்சீட்டுக்களின் மூலம் ஏற்கனவே ஆதனவரி செலுத்தப்பட்டிருப்பின், அத்தகைய பற்றுச்சீட்டுக்களை பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் சமர்ப்பித்து, நிலுவைகளைச் சரிபார்த்துக் கொள்ளுமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வே. வீரபத்திரபிள்ளை,
விசேட ஆணையாளர்.

வலி - தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 09-07-91. [சி/0403]

## அழைப்பு

### நாற்பத்தைந்தாம் நாள்

### வீரவணக்கமும் ஆத்மசாந்தி வழிபாடும்

11-07-1991 இல் ஆனையிறவுப் பெரும்போரில் வீரமரணமடைந்த எமது தலைமகன் கப்டன் வானதியின் நினைவாக, தமிழீழ விடுதலைப் போரில் மாவீரர்களானவர்களுக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை 24-08-1991 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதில் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும், அன்பர்களையும் அழைக்கின்றோம். தனித்தனியாக அழைப்பிதழ் தரமுடியாமைக்கு மன்னிக்கவும்.

நன்றியுடன்
நா. க. சண்முகநாதபிள்ளையும்,
குடும்பத்தினரும்.

174, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். [17840]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி முருகேசு சின்னமணி

தோற்றம்: 1931-08-07 மறைவு: 1991-07-24

பாசமாக இருந்த ஒளிவிளக்கே — அம்மா
பாலம் ஒன்று இருக்கு தென்று இருந்தோம்—ஆனால்
பாலம் உடைந்து எம்மை நடடாற்றில் விட்டெறிந்து
எம் அம்மாவாக இருந்தது போதுமென்றோ
எம்மண் மீட்க இன்னுயிர் ஈந்த
பிள்ளைகளின் அம்மாவாய் விண்ணுலகம் —
சென்றீரோ அம்மா

பிரிவால் வாடும்
பிள்ளைகள்.

முல்லைத்தீவு. (17860)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 11 - 08 - 1972

உதிர்வு: 23 - 08 - 1990

### யேசுதாசன் பத்மன் வெலன்ரையின்

### [வயறிங் பப்பன்]

ஆண்டொன்று சென்றதைய்யா - நின்
நினைவு எம்மை வாட்டுதைய்யா
நின் அகலா மறைவு குடும்ப இருகரமும்
உடைந்த நிலையாய்ப் போனதைய்யா
வேலைகள் அனேகம் உண்டைய்யா
எப்போ நீர் வந்து முடிப்பதைய்யா
குழந்தை சகோதர சகோதரிகளுக்கு - நீர்
கன்டோஸ் சுவிங்கம் கொடுப்பதெப்போ.

பிரிவால் வாடும்:
பப்பா, அம்மா, அண்ணன்மார்,
தம்பிமார், தங்கைமார், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை. (4251)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மீண்டும் கோர்பச்சேவ்

சோவியத் யூனியனில் மிக்கெய்ல் கோர்பச்சேவ்வுக்கு எதிரான புரட்சி முறியடிக்கப்பட்டுவிட்டது.

ஆட்சியைக் கைப்பற்றிய கடும் போக்காளர்கள் சுமார் அறுபது மணி நேரமே தாக்குப் பிடித்திருக்கிறார்கள்.

இந்த நூற்றாண்டில் உலகைப் பரபரப்பில் ஆழ்த்திய புரட்சிகளில் கோர்பச்சேவ்வுக்கு எதிரான புரட்சியும் ஒன்று.

இந்தப் புரட்சி தோற்றுப் போயிருப்பது சோவியத் ஆட்சி பீடத்தில் கடும் போக்காளர்களான சீர்திருத்த எதிர்ப்பாளர்களுக்கு விழுந்த பலமான அடியாகும்.

கோர்பச்சேவ்வுக்கு எதிரான புரட்சி, பொதுமக்களின் ஆதரவு இல்லாததாலேயே தோல்வி கண்டது எனலாம்.

எதிர்காலத்தில் சோவியத் யூனியனில் மக்களின் பேராதரவு இன்றி எவரும் ஆட்சியில் நிலைக்க முடியாது என்ற நிலைப்பாட்டை இது தோற்றுவித்திருக்கிறது.

தமது ஐந்து வருட காலச் சீர்திருத்தத்தின் விளைவு இது என்று நேற்று மீண்டும் மொஸ்கோ திரும்பிய போது கோர்பச்சேவ் பெருமிதம் அடைந்தார்.

பதவியில் இருந்து வீழ்த்தப்பட்ட ஒருவர் மீண்டும் மக்களால் பதவியில் அமர்த்தப்பட்டது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 74 வருட கால வரலாற்றிலே ஒரு சாதனைதான்.

"பெரெஸ்த்ரொய்கா" என்ற அரசியல் — பொருளாதார சீர்திருத்தங்கள் இல்லாதிருந்தால் முன்னரைப் போன்று இந்த ஆட்சி மாற்றமும் எதுவித சலசலப்பும் இன்றி நிறைவேறி இருக்கும் என்பதில் சந்தேகமும் இல்லை.

இந்தப் புரட்சி வெற்றி பெற்றிருந்தால் சோவியத் யூனியனில் சீர்திருத்தங்கள் கைவிடப்பட்டிருக்கும். மீண்டும் பிரேஷ்னேவ் காலத்துக்கு சோவியத்யூனியன் தள்ளப்பட்டிருக்கும். சர்வதேச அரங்கில் ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தங்கள் எல்லாம் ஆட்டம் கண்டு உலகம் மீண்டும் கெடுபிடி யுத்தத்துக்குள் பிரவேசித்திருக்கும். கோர்பச்சேவ் இன்று இரு முக்கிய பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்.

அதிக சீர்திருத்தம் கோருவோரையும் தனிநாடு கோரும் குடியரசுகளையும் சமாளிக்கும் பெரும் பொறுப்பு அவருக்குண்டு.

சோவியத் ஆட்சிப் பீடத்தில் கடந்த பல ஆண்டு காலமாக கடும் போக்காளர்களுக்கும் அதிக சீர்திருத்தம் கோருவோருக்கும் இடையில் இழுபறி இருந்து வந்தது. இதில் பெரும் நெருக்கடிகளின் மத்தியில் நடுவராக செயலாற்றி வந்தவர் கோர்பச்சேவ்.

தற்போதைய புரட்சித் தோல்வி கோர்பச்சேவை அதிக சீர்திருத்தங்களைக் கோருவோர் பக்கத்துக்கு முற்றாகச் சாய வேண்டிய நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

ஆட்சிக் கவிழ்ப்புப் புரட்சிக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியை முன்னெடுத்த ரஷ்ய மாநில அதிபர் யெல்சினையும் அவர் தம் வசம் சேர்த்து திருப்தி செய்ய வேண்டி இருக்கும்.

அதே போல உளவு ஸ்தாபனமான கே. ஜி. பிக்கும் அவர் நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டவராகிறார்.

அதிக சீர்திருத்தங்களை வழங்கும் அதேநேரம் சோவியத்யூனியன் துண்டாடப் படுவதைத் தடுப்பதிலேயே கோர்பச்சேவின் எதிர்காலம் தங்கி இருக்கிறது.

## வீரமரணம்

கடந்த 6 ஆம் திகதி ஆனையிறவு முகாம் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான சுதாகர் (இராசதுரை சுகுமார் — வளலாய், அச்சுவேலி) வீரமரணம் அடைந்தார்.

★ ★ ★

'புலிகளின் குரல்' வானொலியைச் சேர்ந்த வீரவேங்கை அமலன் (தம்பிராசா சிவகணேசன் —திருகோணமலை) நேற்றுக் காலை வீரமரணமடைந்தார்.

இவர் கடந்த நான்காம் திகதி ஆனையிறவுப் பகுதியில் நடந்த சண்டையில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்தார்.

'புலிகளின் குரல்' வானொலியின் ஒளிபரப்பு தொழில்நுட்பவியலாளராக கடமையாற்றி வந்த அமலன் சிறந்த ஒரு படப்பிடிப்பாளருமாவார். (உ-5)

## நல்லூர் உற்சவ கால இசை அரங்கு

நல்லூர் திருவிழாக் காலத்தை முன்னிட்டு அகில இலங்கை கம்பன் கழகத்தினர் இசை அரங்கு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

''கம்பன் கோட்டம்'' மண்டபத்தில் நாளை தொடக்கம் பூங்காவனத் திருவிழாவான செப்டம்பர் 9 ஆம் திகதி வரை நாளாந்தம் மாலை 5-30 மணி தொடக்கம் இசை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

நாளை கே. ஆர். சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கள இசை நடைபெறும். [அ]

## 500 ஈழப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொலீஸ் நிலையங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யத் தவறியதற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள சுமார் 2 ஆயிரம் ஈழத் தமிழரும் நாடு கடத்தப்படும் நாளை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் ஏஜன்சி செய்திகள் தெரிவித்தன.

சிறையில் வைக்கப்படும் ஈழத் தமிழர்களினால் தமிழகச் சிறைகளில் இடநெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## பேச்சுக்கான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சுக்கே இடமில்லை. இனிமேல் இப்பிரச்சினையில் புதிய முயற்சிகளை மேற்கொள்வது விடுதலைப் புலிகளின் கைகளில் தான் தங்கியுள்ளது.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-எ)

## ஈழ அகதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சீர்கெட்டுள்ளது.

ஈழத் தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டிய அவசியம் பற்றி இந்தியா, ஸ்ரீலங்காவிடம் எடுத்துக் கூறியிருக்கிறது. — இவ்வாறு திரு. சோலங்கி மேலும் கூறினார். (உ-எ)

# அடுத்த மாதம் தொடக்கம்

# உணவு முத்திரைக்கு பொருள்

## வருமானம் இழந்தோருக்கும் கிடைக்கலாம்

யாழ்ப்பாணம், ஆக. 23

உணவு முத்திரை வைத்திருப்பவர்களுக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் அதற்குரிய பொருள்கள் வழங்கப்படும்.

ஜனசக்தி திட்டத்தின் கீழ் வருபவர்களுக்கும் மீண்டும் உணவு முத்திரை வழங்கப்பட்டுப் பொருள்கள் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம் செயலகத்தில் நேற்று நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர்களின் மாநாட்டில் இந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மாநாட்டுக்கு அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் தலைமை வகித்தார்.

இடம்பெயர்ந்தோர் நிவாரணம் வழங்க ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து உணவு முத்திரைகளுக்குரிய விநியோகம் நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

நேற்றைய மாநாட்டில் எடுக்கப்பட்ட ஏனைய முக்கிய முடிவுகள் வருமாறு:-

★ யுத்த நிலை காரணமாக முழு வருமானத்தையும் இழந்தவர்களுக்கு, புதிதாக உணவு முத்திரை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

★ புதிய உணவு முத்திரைத் தொகுதி கொழும்பில் இருந்து வரும்வரை கடந்த செப்டம்பரில் வழங்கப்பட்ட உணவு முத்திரையின் 10ஆவது தொடருக்கு பொருள்களை விநியோகித்தல்.

★ முகாமில் உள்ள 12 ஆயிரத்து 665 குடும்பங்களுக்கும் இம்மாதம் நான்கு வார நிவாரணம் வழங்குவது.

★ நிவாரணத்துக்கென வரும் பொருள்களில் இருந்தே உணவு முத்திரைக்காரருக்கான விநியோகத்தைச் செய்தல்.

★ கப்பலில் வரும் பொருள்களில் நிவாரணம் வழங்கி மீதமாகும் பொருள்களில் ஒரு பகுதியை நியாய விலையில் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விற்பனை செய்தல். [அ-3]

## இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஆக. 23

ஆசிரியர்களுக்கும், எழுதுவினைஞர்களுக்குமான ஆங்கிலப் பாட நெறித் திட்ட [TACEP] இறுதிப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இந்தப் பாட நெறிக்கான மாநில இணைப்பதிகாரி இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார். [3]

## கொழும்பில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சுக்கள் நடத்திியிருப்பதாக அறியவந்தது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நான்கு அம்ச முன்னோடி வேலைத் திட்டம் ஒன்றை முன்வைத்தே திரு. அலென் அல்பிறெட் அரசாங்க அதிகாரிகளுடன் பேசி வருவதாக அறியவருகிறது.

கொழும்பில் எதிர்க் கட்சித் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களையும் அவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறார் என்றும் தெரிய வந்தது.

திரு. அலென் அல்பிறெட் தன்வசம் வைத்திருக்கும் 4 அம்ச முன்னோடி வேலைத் திட்டம் வருமாறு:-

★ 1989 ஆம் ஆண்டு இருந்த நிலைகளுக்கு படைகள் திரும்பவேண்டும்.

★ நிபந்தனையற்ற பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் அரசு ஆரம்பிக்கவேண்டும்.

★ சுதந்திரமான தேர்தலை நடத்த முன்வரவேண்டும்.

★ கனேடிய அரசியல் அமைப்புக்கு சமமான அதிகாரம் கொண்ட அரசியல் அமைப்பை உருவாக்க முனைதல். (அ-3)

ஓய்வு பெற்றுச் சென்ற

## அரச ஊழியர்களுக்கு ஆங்கில ஆசிரிய நியமனம்

### இப்போது விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஆக. 23

யாழ். மாவட்டத்தில் இளைப்பாறிய அரச ஊழியர்களையும், ஆசிரியர்களையும் ஆங்கில ஆசிரியர்களாக நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆங்கில ஆசிரியர் பதவி வெற்றிடமாக உள்ள பாடசாலைகளின் விவரங்களை யாழ். கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு, அந்தப் பாடசாலையின் அதிபர்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை கோட்ட மட்டத்தில் இயங்கும் விசேட குழு பரிசீலனை செய்து முடிவு செய்யும்.

நியமனம் பெறும் பட்டதாரிகளுக்கு மணித்தியாலத்துக்கு 75 ரூபாவும், பயிற்றப்படாதவர்களுக்கு மணித்தியாலத்துக்கு 50 ரூபாவும் வேதனமாக வழங்கப்படும். (உ-3)

## இடைத்தேர்தல்

தமிழ்நாட்டில் துறைமுகம், காங்கேயம், எழும்பூர் மற்றும் முசிரி ஆகிய சட்டசபைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்கள் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இத்தொகுதிகளில் சகல தேர்தல் பிரசார வேலைகளும் நேற்றுடன் முடிவுற்றன. [அ-எ]

## பூநகரியில் உப்பு

பூநகரி, ஆக. 23

பூநகரிப்பகுதியில் உள்ள ஆலங்கேணி, நல்லூர், கறுக்காய்த்தீவு ஆகிய இடங்களில் இம்முறை உப்பு பெருமளவு விளைந்துள்ளது.

சைக்கிள்களிலும், மாட்டு வண்டிகளிலும், உழவு இயந்திரங்களிலும் மக்கள் உப்பை எடுத்துச் செல்வதைக்காணக் கூடியதாக இருக்கிறது. (இ-135)

## கோர்பியை சதிகாரர்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றிய சரத்துகளில் இறுதி நேரத் திருத்தங்களைச் செய்துகொண்டிருந்தேன்.

அவ்வேளை எதிர்பாராத விதமாக மாஸ்கோவிலிருந்து தூதுக்குழு ஒன்று என்னைச் சந்திக்க திடீரென வந்திறங்கியது.

ஏதோ தப்பாக நடந்துவிட்டதைநான் உணர்ந்தேன். உடனடியாக நண்பர்களுடன் தொடர்பு கொள்ள தொலைபேசியை எடுத்தேன்.

ஆனால் என்னைச் சூழவிருந்த எல்லாத் தொலைத் தொடர்புகளும் வெட்டப்பட்டிருந்ததை அறிந்தேன்.

மாஸ்கோவிலிருந்து வந்த குழுவினர் எனது பொறுப்புகளை துணை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கும்படி வற்புறுத்தினர். 'பிளாக்-மெயில்' செய்தார்கள். உளவியல் முறையில் என்னைத் துன்புறுத்தினார்கள். ஆனால் நான் மறுத்து விட்டேன்

எனது மெய்ப்பாதுகாவலர் ஒருவர் கொண்டுவந்த வானொலி மூலம் சதிப்புரட்சியாளர்களின் பத்திரிகையாளர் மாநாடு பற்றியும், சதிப்புரட்சிக்கு எதிரான மக்கள் எழுச்சி, உலகத்தலைவர்களின் வற்புறுத்தல் ஆகியவற்றையும் அறிந்து கொண்டேன்.

தடுப்புக்காவலில் நானும் எனது மனைவியும் அச்சமுற்ற நிலையில் இருந்தோம். தரப்பட்ட உணவுகளில் நஞ்சு கலந்திருக்கலாம் என்ற அச்சத்தில் உணவையே தவிர்த்தோம்.

நான் நம்பியிருந்தவர்கள்— என்னால் உயர்த்தப்பட்டவர்களினால் நான் ஏமாற்றப்பட்டேன்.

கே. ஜி. பி. தலைவரையும், பாதுகாப்பு அமைச்சரையும் நான் அதிகம் நம்பினேன். ஆனால் அவர்களும் எனக்கு எதிரான சதிப்புரட்சியில் சேர்ந்துகொண்டு விட்டார்கள்.

சதிப்புரட்சி தோல்வியடையத் தொடங்கியதும் என்னைச் சந்திப்பதற்காக அவர்கள் கிரிமியாவுக்கு விரைந்து வந்தார்கள். ஆனால் நான் அவர்களை இனிமேல் சந்திக்கப் போவதில்லை என்று கூறிவிட்டேன்.

—இவ்வாறு கோர்பச்சேவ் மேலும், கூறினார்.

சதிப் புரட்சிக்கு எதிராய் போராடிய மக்களுக்கும், ரஷ்ய மாநிலக் குடியரசின் அதிபர் பொரிஸ் யெல்சினுக்கும் அவர் நன்றி தெரிவித்தார். (உ-த-5)

## சதிக்குழு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் டிமிட்ரி யாஷோவ், கே. ஜி. பி. உளவு நிறுவன தலைவர் விளாடிமீர் கிருஷ்கோவ் ஆகியோரும் கைதானவர்களில் அடங்குவர்.

இவர்களுக்கு எதிராக விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

இதேவேளை—

சதிக்குழுவுக்கு உடந்தையாகச் செயற்பட்டதாகக் கூறப்படும் சோவியத் அரசின் வானொலி மற்றும் டெலிவிஷன் நிறுவனங்களின் தலைவர்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். (உ-எ-த-5)

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## எம்மோடு நிற்கவா!

பண்ணோடு பாடியுன் திருவடியைப்
போற்றியே
உன்னோடு சொல்லியெம் அவலங்கள்
உரைக்கிறோம்
மண்ணோடு வாழவே களம் சென்று
நிற்கிறோம்
எம்மோடு நிற்கவா! நல்லூருக்
கந்தனே!

- முருகனடியான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்கடை திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் பிரஜாபதி வருடம் ஆவணி மாதம் 7-ஆம் நாள் [23 - 08 - 1991] வெள்ளிக்கிழமை காலை 7.39 மணி முதல் 8.51 மணி வரை வரும் சுபவேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்

### ★ சந்திரன்ஸ் வர்த்தக நிலையம் ★

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த இருப்பதால், அவ்வமயம் தாங்கள் வருகைதந்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- சந்தை பெட்டிக்கடை 'சந்திரன் ஸ்ரோர்ஸ்' இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

S. B. 5, மார்க்கட், தங்கள் நல்வரவை நாடும்
சாவகச்சேரி. ப. சந்திரகாந்தன்

(C/0384)

---

உ
ஓம் ஸ்ரீ நாராயணாய நம

அளவெட்டி தெற்கு - நாகேஸ்வரம்

## ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம்

## வருடாந்த மஹோற்சவம்

23 - 08 - 1991 — 03 - 09 - 1991

**கொடியேற்றம்:**
23 - 08 - 1991 வெள்ளி மு. ப. 12-10 மணி

**தேர்த்திருவிழா:**
01 - 09 - 1991 ஞாயிறு மு. ப. 8-00 மணி
தேர்வீதியுலா ஞாயிறு மு. ப. 10-00 மணி
உறியடி உற்சவம் ஞாயிறு பி. ப. 5-00 மணி

**தீர்த்தத் திருவிழா:**
ஸ்ரீரங்கநாதன் திருவடிப்பூசை [அடியார்கள்]
02 - 09 - 1991 திங்கள் மு. ப. 10-00 மணி
தீர்த்தோற்சவம் திங்கள் மு. ப. 11-30 மணி

**ஆஞ்சநேயர் வைரவப் பொங்கல்:**
03 - 09 - 1991 செவ்வாய் மு. ப. 9-00 மணி
திருக்கல்யாணம்: செவ்வாய் பி. ப. 2-00 மணி

அடியார்கள் அனைவரும் சுவாமி தரிசனம் செய்து தோஷ நிவாரணம் அடைந்து, இஷ்ட சித்திகளைப் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
தேவஸ்தான பொறுப்புரிமை,
பரிபாலன சபை.

விளம்பர உபயம்: உரிமை: ஆர்.பி. ராஜன்,

**கஜலக்ஷ்மி ஜுவல்லறி,**
470, கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

[சி-0381]

---

## கொக்குவில் மத்திய சனசமூக நிலைய

விளையாட்டுக் கழகம் நடாத்தும்
30 ஓவர்கள் கொண்ட மாபெரும்

## கிரிக்கெட் போட்டி

**விண்ணப்ப முடிவு திகதி: 28-08-91**

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

குலுக்கல்: 30-08-91 (வெள்ளி) மாலை: 4.00 மணி
இடம் : கொக்குவில் இந்துக் கல்லூரி

சி. ஜெகதீஸ்வரன்
செயலாளர்:
கொ. ம. ச. ச. நிலைய, விளையாட்டுக் கழகம்.

(42597)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 361/1 இல இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஜெயலலிதாவின் காலில் விழுவது பெரும் புண்ணியம்!

சென்னை, ஆக. 23

முதலமைச்சர் ஜெயலலிதாவின் காலில் தாம் விழுந்து வணங்கியதை ஒரு புண்ணியமாகக் கருதுவதாக தமிழக சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா கூறினார்.

நடுநிலைமையாகச் செயல்படவேண்டிய சபாநாயகர், முதலமைச்சரின் காலில் விழுந்து வணங்கலாமா என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் சேடப்பட்டி முத்தையா இப்படிச் சொன்னார்.

(உ-எ)

## ஐ. நாவின் பணம் கிடைத்ததும் தொடர்பு

கொழும்பு, ஆக. 23

குவைத் ஆக்கிரமிப்பு காரணமாக வேலையிழந்தவர்களுக்கான நஷ்டஈட்டுப் பணம் ஐ. நாவிடமிருந்து கிடைத்தவுடன், வேலையிழந்த இலங்கையருடன் தொடர்பு கொள்ளப்படும் என தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

(த-எ)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் பொன்னம்மா

கொக்குவில் பொற்பதியைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் (கொக்குவில் நாமகள் வித்தியாசாலை முன்னை நாள் சிரேஷ்ட ஆசிரியை) காலமானார்.

இவர் முன்னைநாள் அதிபர் ஆசிரியமணி ஆர்.ரி.சுப்பிரமணியத்தின் அருமை மனைவியும், குமாரமூர்த்தியின் (இத்தாலி) அன்புத் தாயாரும், திருமதி கமலகுமாரி குமாரமூர்த்தியின் (இத்தாலி) ஆசை மாமியாருமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றுக் கொக்குவில் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தகவல்:
வை. கனகரத்தினம்
(17669)

### திருமதி சிவசம்பு சின்னத்தங்கம்

திருமதி சிவசம்பு சின்னத்தங்கம் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு க.சிவசம்பு அவர்களின் அன்பு மனைவியும், திருமதி செல்லர்பரணம், காலஞ்சென்ற திருமதி கௌரியம்மா, திருமதி பராசக்தி, திரு, க, சி. கனகசபாபதி [இளைப்பாறிய உதவி சுங்க அதிகாரி], காலஞ்சென்ற திருமதி சரஸ்வதி ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற திரு.கா.கார்த்திகேசு, காலஞ்சென்ற திரு கா. செல்லையா, திருமதி க. குணபூசனி அம்மாள், திரு. செ. சோதிப்பெருமாள் ஜே. பி. [அதிபர், யா/இணுவில் சைவமகாஜன ம.வி.] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று [22-8-91] நடைபெற்றன. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
காரைக்கால் வீதி,
இணுவில். (17668)

---

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

### கல்வியாண்டு 1991 / 1992

இலங்கை பல்கலைக்கழகங்களின் பட்டப் படிப்பு நெறிக்கான:

**கலைமாணி - B.A., வணிகமாணி - B. Com.**
**விஞ்ஞானமாணி - B. Sc.**

ஆகிய பட்டங்களுக்கு A/L இல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

விவரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் தபால் மூலமும், நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

முடிவு திகதி: 10 - 09 - 1991

இதற்கான விரிவுரைகள் ஆரம்பம்: 14 - 09 - 1991

விவரங்களுக்கு:

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்,

(சி-0405)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



### அப்பாக்குட்டி பொன்னுத்துரை

(சொக்கர்)

பிறப்பு: 11 - 02 - 1910 இறப்பு: 25 - 07 - 1991

அன்னாரின் சபிண்டீகரணமும், வீட்டுக்கிரியைகளும் ஆவணி மாதம் 8 ஆம் திகதி (24 - 08 - 91) சனிக்கிழமை காலை 10- 00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

உறவினர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தந்து ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.

93/3, கைலாசபிள்ளையார் கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (17877)

---

## மரண அறிவித்தல்

### ஞானவல்லி பொன்னுத்துரை

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாக கொண்டவரும், கல்வியங்காட்டில் வசித்தவருமாகிய திருமதி பொ. ஞானவல்லி 22-8-91 நண்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு, அன்னமுத்து ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் மனைவியும், க. செல்லையா [ஆசிரியர்], க. விஸ்வநாதன், க. அன்னம்மா, செ. பரஞ்சோதி ஆகியோரின் சகோதரியும், பொ. சிவகுமார், பொ. சிவநாதன் [ஜேர்மனி], பொ. சிவராஜா [ஓமான்], சிவனேஸ்வரி, சிவமலர், சிவமணி ஆகியோரின் தாயாரும், வ. செல்வரத்தினம், து. அரியரத்தினம் [கணக்காளர், DRCC], சி. பஞ்சானந்தன் [குகன் ஸ்ரோர்ஸ், தலவாக்கலை], இராஜேஸ்வரி, யசோதரா, சந்திரலீலா ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [23-8-91] காலை 10 மணியளவில் கல்வியங்காட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.சிவகுமார்
[மகன்]

விநாயகர் வீதி,
கல்வியங்காடு. (17667)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org